**IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.**

**OS. No. 149/2021**

| | | | |
|---|---|---|---|
| | | DEPOSITION OF WITNESS | DW.1 |
| NAME | கமலநாதன் | TALUK | |
| FATHER NAME | | RELIGION | |
| AGE | | OCCUPATION | |
| VILLAGE | | | |

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 05.02.2026.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1. வழக்கு தாக்கல் செய்துள்ள தாமரைசெல்வன் எனது மகன். சிங்கல்பாடியில் 3வது தலைமுறையாக நாங்கள் இருக்கிறோம். எங்கள் குடும்பத்திற்கு விவசாயம் தான் பிரமாண தொழில் என்றால் சரிதான். கூட்டுகுடும்பமாக தான் விவசாயம் செய்வோம் என்றால் சரிதான். விவசாயத்தின் மூலம் வரும் வருமானம் தான் எங்கள் அனைவருக்கும் வருமானம் என்றால் சரிதான். அதை தவிர வேறு வருமானம் கிடையாது என்றால் சரிதான்.

2. சாமி கவுண்டரின் அப்பா பெயர் முத்தப்பா. அவரும் சிங்கல்பாடியில் தான் பிறந்து வளர்ந்தார் என்றால் சரிதான். அவருக்கும் விவசாயம் தான் தொழில் என்றால் சரிதான். அவரும் சொந்த நிலத்தில் தான் விவசாயம் செய்தார் என்றால் சரிதான். அந்த சொத்து தான் சாமி கவுண்டருக்கு வந்துள்ளது என்றால் சரிதான். சாமி கவுண்டர் மேல் உள்ள சொத்துக்காக தான் தாமரை செல்வன் வழக்கு போட்டுள்ளார் என்றால் ஆமாம்.

3. அதே நிலத்தில் தான் பூர்விகமாக விவசாயம் செய்துவருகிறோம் என்றால் சரிதான். அது எங்களுக்கு பரம்பரை பரம்பரையாக பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். எனக்கு தாமரைசெல்வன் தவிர மேலும் இரண்டு பிள்ளைகள் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர்களை இந்த வழக்கில் சேர்ப்பதற்கும் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாதிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்றாலும் அதை மறுக்க வேண்டி பிரமாண வாக்குமூலத்தில் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் தாவாப்படி பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் அவன் என்னை

பார்க்காமல் போகிறான் அவனுக்கு கிடைக்க வேண்டிய சொத்தை அளந்து பார்த்து எடுத்துக்கொள்ளட்டும்.

K KARTHICK ASATH    Digitally signed by K KARTHICK ASATH

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
குடியாத்தம்.